கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

மனுதாரர் தரப்பு 1வது சாட்சி (ம.சா.1)

STC No. 38/2023

| | |
|---|---|
| பெயர் | –அசோக் |
| த/பெ | –சொக்கலிங்கம் |
| கிராமம் | – |
| தாலுகா | – |
| தொழில் | – |
| ஜாதி | – |
| மதம் | – |
| வயது | –32 |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02ம் நாள் வெள்ளிக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கு சம்பந்தமாக எழுத்து மூலமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வாக்குமூலம் எனது அறிவுறுத்தலின் பேரில் தயார் செய்யப்பட்டுள்ளது. எனது வாக்குமூலத்தை படித்து பார்த்து சரியென்று அறிந்து கையொப்பம் செய்திருக்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

| ம.சா.ஆ. | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| 1 | 24.03.2022 | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கொடுமுடி வங்கி கிளை காசோலை எண்.720503 என்ற ரூ.6,00,000/–க்கான காசோலை | அசல் |

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.02 17:29:22 +0530

| | | | |
|---|---|---|---|
| 2 | 05.04.2022 | அக்கவுண்ட் குளோஸ்டு என்று திருப்பப்பட்ட காவல்கிணறு கிளை இந்தியன் வங்கி குறிப்பாணை | அசல் |
| 3 | 18.04.2022 | காசோலை தொகையை கேட்டு புகார்தாரரின் வழக்கறிஞர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 4 | 18.04.2022 | அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது | அசல் |
| 5 | | திருப்பப்பட்ட அஞ்சல் உறை | அசல் |

<u>குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் போது யாரெல்லாம் வந்தார்கள் என்றால் ஜெபரோஸ் அவரது கணவரும் வந்தார். நீங்கள்பணம் கொடுத்ததாக சொல்லப்படுவது பணமாக கொடுத்தீர்களா, காசோலையாக கொடுத்தீர்களா என்றால் பணமாக கொடுத்தேன். அந்த பணம் வங்கி மூலமாக எடுத்தீர்களா அல்லது எப்படி உங்கள் கைக்கு வந்தது என்றால் நான் இருசக்கர வாகனம் வாங்கி விற்பனை வியாபாரம் செய்து வருகிறேன். அதன் மூலம் பணம் கிடைத்ததாகும்.

2. நீங்கள் இருசக்கர வாகனம் வாங்கி விற்பனை வியாபாரம் சம்மந்தமாக லைசென்ஸ் வைத்துள்ளீர்களா என்றால் வைத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.02 17:29:28 +0530